BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
பன்னாட்டுத் தமிழ் ஆய்வு இதழ்
E - ISSN: 3139 -1893
An international open access, peer- reviewed, Online Multi – disciplinary refereed journal

# கோத்தர் மலையின மக்களின் வாழ்வியல் மாற்றங்கள்

**முனைவர் மா. முத்துவிஜயலட்சுமி**
எம்.ஏ., எம்.ஏ., எம்.பில், பிஎச்.டி., பி.எட்., எம்.எஸ்.ஸி (யோகா),
இணைப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் உராய்வு மையம்,
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, சின்னக்கலையம்புத்தூர், பழனி. Mail Id :
muthuviji0306@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

நீலகிரி மாவட்டத்தில் வாழும் பழங்குடியினரான கோத்தர்களின் வாழ்விடம் – மொழி - குடியிருப்புகள் - அமைப்பு முறை - உருவ அமைப்பு – ஆடை அணியும் முறை- உணவு- செய்யும் தொழில்- வாழ்வில் பின்பற்றக்கூடிய நம்பிக்கைகள்- சடங்கு முறைகள், திருவிழாக்கள் –இசையோடு நடனம் ஆடும் முறைகள் –உறவுமுறைகள்- திருமணம் செய்து கொள்ளும் முறை –தற்பொழுது வாழ்வில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஆகியனப் பற்றி விளக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**

கோத்தர் பழங்குடியினர் (Kota Tribes), வாழ்வியல் மாற்றங்கள் (Life Style Changes/ Socio- cultural changes), நீலகிரி பழங்குடிகள் (Nilgiri Tribes), பாரம்பரியத் தொழில்கள் (Traditional Occupations), பொருளாதார மாற்றம் (Economic Transition), திருவிழாக்கள் (Traditional Festivals), வாழ்வாதார சவால்கள் (Livelihood challenges)

## முன்னுரை

பழங்காலந் தொட்டு மலைப் பகுதிகளிலும் சமவெளிப் பகுதிகளிலும் பழங்குடி இனத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். நீலகிரி மலையில் தோடர், இருளர், பணியர், முள்ளுக் குறும்பர், கோத்தர் எனப் பலவகை மலையின மக்கள் வாழ்கின்றனர். நாட்டுப் புறச் சமவெளிகளில் வாழும் மக்களின் வாழ்க்கையில் இருந்து மலையின மக்களின் வாழ்க்கை பெரிதும் வேறுபட்டு காணப்படுகின்றது. அவர்களின் வாழ்க்கையினை அறிவதற்கு பண்பாடு, பழக்கவழக்கம், தோற்றம், உணவு, உடை, இசை, நாடகம், சடங்கு முறைகள், விழா, தொழில், நம்பிக்கை முதலிய பலவற்றை அறிய வேண்டியது அவசியமாகும். ஆகையால், இக்கட்டுரையின் வாயிலாக கோத்தர் இன மக்களின் வாழ்வு நிலையினை அறிந்து கொள்வதே நோக்கமாக அமைகின்றது. “கோத்தர்களைத் திராவிட இனத்தவர்கள்” என மொழி இயல் வல்லுநர்களும், மானிட இயல் வல்லுநர்களும் கூறுவர். மானிட இயல் தத்துவப்படி, இவர்கள் “நீக்ரோடைட்டு” என்னும் ஆதிமனித இனத்தைச் சேர்ந்தவர்கள்”1 என கோ.சுப்பையா தம் ஆய்வு நூலில் குறப்பிட்டுள்ளார்.

## வாழ்விடம்

நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஏழு கிராமங்களான தமிழ்நாட்டில் ஆறு கிராமங்கள் மற்றும் கேரளாவின் வயநாடு பகுதியில் ஒரு கிராமம் ஆகிய இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். தாங்கள் வசிக்கும் இடத்தை “கோகால்” என்று அழைக்கின்றனர். இத்தகைய தனித்துவமான குடியிருப்புகளில் வாழும் பழங்குடி இன மக்களாகிய இவர்களின் வாழ்வியலும் பழக்க வழக்கங்களும் இயற்கையை மையமாகக் கொண்டவையாகத் திகழ்கிறது.இவர்களின் மக்கள் தொகை சுமார் ஆயிரத்து நூறாகும்.

தம் வீட்டினை அவர்களது மொழியில் “பய்” என்றும் தாம் வாழும் தெருக்களைக் “கேரி” என்றும் அழைக்கின்றனர். இம் மக்களின் குடியிருப்புகள் நீரோடையை ஒட்டி அமைந்து இருக்கின்றன. குடியிருப்புகள் “அனைத்தும்” நீரோடையினை மையமாக வைத்து அக்கேரி, பிப்கேரி, கொர்க்கேரி எனப் பல பிரிவுகளாக அமைந்துள்ளன. “அக்கேரி, பிப்கேரி என்பது தமிழில் அக்கரைக் குடியிருப்பு, இக்கரைக் குடியிருப்பு” என்று அமைகின்றன.



குடியிருப்பு

“வீடுகள் ஒரு திண்ணை, ஒரு படுக்கை அறை அடுப்பங்கரைக் கொண்டதாக அமைந்துள்ளது”2. எல்லா வீடுகளும் படுக்கை அறையில் மரப்பலகைகள் வைத்து அமைக்கப்பட்டு ஒரு மாடியும் கொண்டதாக உள்ளது. இரயில் பெட்டி இணைப்புகள் போல, வீடுகள் இணைத்துக் கட்டடப்பட்டுள்ளன. ஊருக்கு நடுவே பசும்புல் மெத்தை கொண்ட ஒரு சிறு சமவெளியுடன் உள்ளது. இதில் விழாச் சடங்கு குறித்த ஆண், பெண் ஆட்டங்கள் நடைபெறும் ஊருக்குள்ளே தன் ஊருக்குப் பொதுவான ஓர் இரும்புக் கொல்லப் பட்டறை கூடாரமும், ஊருக்கு வெளியே இம்மக்களுக்கான சுடுகாடும் உள்ளது.பாரம்பாரியக் குடிசைகளில்(pai) இருந்து மாறி இன்று செங்கல், சிமெண்ட் கொண்ட வீடுகளில் வாழ்கின்றனர்.“ஒவ்வொரு ஊரின் வலது கோடியில் இரு கோயில்கள் உண்டு.அவற்றை “அய்னோர் குட்ய்”(தந்தை கடவுள்கோயில்) என்றும் “அம்னோர் குட்ய்”(தாய் கடவுள் கோயில்) என்றும் வழிங்குகின்றனர்.

இவ்விருக் கோயில்களின் காரியங்களைச் செய்வதற்கு “மின்த்கணோான்” என்னும் தலைமை பூசாரியும் ,அவருக்குத் துணையாக “தேர்கார்ன்” என்னும் இரண்டு பூசாரிகளும் இருப்பார்கள். இவர்கள் தான் கோத்தர்களின் பண்டிகையான கம்ப்ட்ராயன்தேர்ஐச் சிறப்புற நடத்ததுவார்கள்”3 என கோ.சுப்பையா தம் ஆரய்ச்சி நூலில் வெளிப்படுத்தியுள்ளார்

**தோற்றம்**

இவ் இனமக்கள் சிவந்த நிறத்திலும் பெண்கள் நான்கு அடியும், ஆண்கள் ஐந்து அடியும் சராசரி உயரம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். ஆண்களும், பெண்களும் தலைமுடியைச் சொருகிக் கொண்டைப் போட்டுள்ளனர்.

**கோத்தர்**



1870 ஆம் ஆண்டுகளில் கோத்தர் பெண்களின் கலாச்சார உடை.




**உடை**

இது போலவே இருபாலரும் காதுகளில் ஆபரணங்கள் அணிந்து உள்னர். மேலும் இவர்களின் பாரம்பரிய உடையானது, ஆண்கள் மற்றும் பெண்கள் “வர்ட்ஸ்“ எனப்படும் தடிமனான வெள்ளை நிறப் பருத்தி ஆடையைப் போர்த்திக் கொள்கின்றனர். இந்த வழக்கனமானது இன்றைய இளைஞர்களிடம் மாறி வரும் நிலை காணப்படுகிறது.

**மொழி**

இவர்கள் பேசும் மொழியானது கோத்தர் மொழியாகும். இம்மொழியானது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இது தோடர் மொழியுடன் நெருங்கிய தொடர்புடையது. “கோத்தர்கள் தங்கள் மொழியை கோவ்மான்த் (கோத்தர் மொழி) என்று அழைக்கின்றனர். இவர்கள் மொழிக்கு வரி வடிவம் கிடையாது. இவர்கள் மொழி பழந்தமிழினோடு (Old Tamil) மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது”4 என கோ.சுப்பையா கூறியுள்ளார். எழுத்து வடிவம் இல்லாமல் வெறும் பேச்சு மொழியாக மட்டுமே இருந்த இவர்களின் பாரம்பரிய கோவ் மொழிக்கு 2015-ஆம் ஆண்டு பூசாரி கனகராஜன் என்பவரால் 40 ஆண்டு முயற்சியின் காரணமாக எழுத்து வடிவம் உருவாக்கப்பட்டது. இது இவர்களின் மொழி அழியாமல் காக்க உதவும் மிகப் பெரிய மாற்றமாகும்.

**உறவுமுறைகள்**

இம் மக்கள் மாமா மகள், அத்தை மகள் போன்ற முறைப் பெண்ணையே மணந்து கொள்கின்றனர். “ஒரு சேரியில் உள்ளவர்கள், மறுசேரியில் உள்ள (கொர்க்கேரி) வர்களிடையிலேயே திருமணம் செய்து கொள்கின்றனர். அச்சேரி மற்றும் பிப்கேரியில் உள்ளவர்கள் அனைவரும் சகோதர உறவுடையவர்களாகவே உள்ளனர்”5. நீலகிரி மலையின் மக்களுள் ஒரு பிரிவினரான தோடர்களிடம் பலதார மணம் காணப்படுகின்றது. தோடர்களோடு தொடர்பு கொண்டு வாழும் கோத்தர்களிடம் ஒருத்திக்கு ஒருவன் என்ற மனநிலையே அமைந்துள்ளது. இவர்களிடம் திருமணத்தின் போது எருமை மாடு சீதனமாக அளிக்கப்படுகின்றது. இவர்கள் பிற நீலகிரி பழங்குடியினருடன் (தோடர், படகர்) கொண்டிருந்த பரஸ்பரச் சார்பு நிலை மாறி, இன்று தனித்துவமான பொருளாதாரச் சுதந்திரம் பெற்ற சமூகமாக மாறியுள்ளனர்.

**உணவு**

இவர்களின் பாரம்பரிய முக்கிய தானியம் தினை ஆகும். தங்கள் மொழியில் இதனை வதம்க என்பர். மேலும் ராகியை களி மற்றும் சோறாக செய்து உண்கின்றனர். இது சடங்கு காலங்களில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அசைவ உணவுகளில் மீன், கோழி, மட்டன், காய்கறிகளைச் சாப்பிடும் வழக்கமும் உள்ளது. கோத்தகள் தற்போது அரிசி மற்றும் உள்ளூரில் கிடைக்கும் பருப்பு, காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றை உணவில் சேர்த்து உண்ணும் வழக்கம் காணப்படுகிறது. இத்தகு நிலையானது அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட பெரும் மாற்றமாகும்.

**நம்பிக்கைகள்**

வேட்டைத் தொழிலை இன்னும் கைவிடாமல் வாழும் இவர்களிடையே பறவை, விலங்கினங்கள் ஆகியவற்றோடு தொடர்புபடுத்தும் நம்பிக்கைகள் காணப்படுகின்றன. “காகம் கரைந்தால், அக்காகம் எத்திசை நோக்கி கரைகிறதோ, அந்தப் பக்கத்தில் இருந்து கெட்ட செய்தி வரும் என்றும், குறுக்கே பாய்ந்தால் கெடுதி என்றும், கருங்குருவி என்னும் சாகுருவி மக்கள் செல்லும் பயணத்தின் போது குறுக்கே பாய்ந்தால் பயணம் சிறக்காமல் ஆபத்து ஏற்படும் எனவும் தாங்கள் வளர்க்கும் எருமை மாடுகளுக்கு நோய் வந்தால் சாமி மக்களுக்கு செய்துள்ள கோளாறு”6 என்றும் நம்பிக்கை நிலவுகிறது. இவை தவிர

விழாக்காலங்களில் காலில் செருப்பு அணிந்திடக் கூடாது என்றும் விழாவின் போது குல மரபுப்படியான வெண் போர்வை போர்த்திய நிலையிலேயே காணப்படும் மரபுரீதியான உடைகளையே உடுத்த வேண்டும் என்ற நம்பிக்கையும் அவர்களிடையே காணப்படுகிறது.

**தொழில்**

இம்மக்கள் மற்ற பகுதிகளில் வாழும் நீலகிரி மலையின மக்களைப் போன்று இல்லாமல், கடுமையான உழைப்பாளிகளாகவும் பயிர்த் தொழில் செய்பவர்களாகவும் மட்டுமன்றி, சிறந்த கைவினைஞர்களாகவும் திகழ்ந்தனர். இவர்கள் “மரவேலைப்பாடு, மண்பாண்டம் செய்தல், இரும்புக் கொல்லப் பட்டறை ஆகியவற்றில் சிறந்து விளங்கினர்.





**தொழில்**

நீலகிரி பகுதியில் உள்ள மற்ற இன மக்களுக்கு தேவையான கருவிகளையும், பாத்திரங்களையும், தோல் பொருட்களையும் தயாரித்து வழங்கினர். தம் ஓய்வுக் காலங்களில் காடுகளில் வேட்டையாடுவதை நல்ல பொழுதுபோக்காகக் கொண்டு வாழ்ந்தனர். தற்போது இத்தொழில்களைச் செய்பவர்களின் எண்ணிக்கைக் கணிசமாகக் குறைந்து விட்டது.

**இசையும் நடனமும்**

இவர்கள் சடங்குகள், திருவிழாக்கள் மற்றும் இறுதிச் சடங்குகளுக்கென தனித்தனி இசை வடிவரங்களையும், நடன முறைகளையும் காலங்காலமாகப் பாதுகாத்து வருகின்றனர்.





**இசையும் நடனமும்**

கொம்பு, பறை, தப்பட்டை, குழல் போன்றவை பாரம்பரிய இசைக்கருவிகளாகும். பிற பழங்குடிகளான தோடர், படகர்களும் கூடத் தம் சடங்குகளுக்கு இம் மக்களின் இசையையே விரும்பி நாடுகின்றனர். திருமணச் சடங்குகளில் உறவினர்கள் அனைவரும் ஒன்றுகூடி வட்டமாகச் சுற்றி வந்து ஆடும் நடனமும் காணப்படுகிறது.

**முடிவுரை**

கோத்தர்கள் தற்போது தங்கள் கிராமங்களில் உருளைக்கிழங்கு, கேரட், தேயிலை போன்ற பயிர்களைப் பயிரிட்டு வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் பலர் அரசின் உதவியால் கல்வி அறிவினைப் பெற்று உயர் அதிகாரிகளாகப் பணிபுரியத் தொடங்கி உள்ளனர். நகர்ப்புறங்களில் வாழ்ந்தாலும் தங்களின் பாரம்பரிய சமூகக் கட்டுப்பாடுகளை மறவாமல் பின்பற்றி வருகின்றனர். மேலும் இப்பழங்குடியினரின் தனித்துவமான கலைகளும், பாரம்பரிய இசைக்கருவிகளின்

பயன்பாடும் மறைந்து வருவது அவர்ளின் கலாச்சாரத்திற்கு ஏற்பட்டுள்ள சவாலாகக் காணப்படுகின்றது. உடைகள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் நவீன முறை புகுந்தாலும் கம்பட்டராயர் பண்டிகை போன்ற திருவிழாக் காலங்களில் தங்களின் பாரம்பரிய வெள்ளை உடைகளை அணிந்து, குலதெய்வ நடனமாடித் தங்களின் அடையாளத்தை இன்றும் பாதுகாத்து வருகின்றனர்.

**சான்றெண் விளக்கம்**

1. ச. அகத்தியலிங்கம், தமிழகப் பழங்குடி மக்கள், பக்.15-16
2. கே.ஏ.குணசேகரன், தமிழக மலையின மக்கள், ப.61,
3. ச. அகத்தியலிங்கம், தமிழகப் பழங்குடி மக்கள், ப.16
4. கே.ஏ.குணசேகரன், தமிழக மலையின மக்கள், ப.18
5. மேலது.,ப.62
6. மேலும்.,ப.68

**துணை நூற்பட்டியல்**

1. அகத்தியலிங்கம், ச., தமிழகப் பழங்குடி மக்கள், சிவகாமி அச்சகம், அண்ணாமலை நகர், முதற்பதிப்பு, பிப்-1972.
2. குணசேகரன், கே.ஏ., தமிழக மலையின மக்கள், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை-600098, இரண்டாம் பதிப்பு - செப்டம்பர் 2011
3. கைலாசபதி, க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு, சென்னை,1978

*****